மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து அருங்குணம் ஊராட்சியில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் தா. மோ.அன்பரசன், வீடுவீடாக சென்று பொதுமக்களை நேரில் சந்தித்து திண்ணைப் பிரச்சாரம் செய்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். அருகில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி, என்.சந்திரன், ப.குணாளன், டி.பாபு, ஜி.கே. ரவி, கோல்டு டி.பிரகாஷ், எல். பிரபு, கே.பி.முரளிகிருஷ்ணன், செல்வேந்திரன், நடராஜன், சாலமன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.





மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்!

ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!

மதுராந்தகம், செப். 28-

மதுராந்தக சட்டமன்ற இடைத்தேர்தலை முன்னிட்டு முன்னதாக பூத் நிர்வாகிகளுடன் ஆலோசனைக் கூட்டம் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு முன்னாள் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அக்டோபர் ஆறாம் தேதி மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. அதற்கான வாக்கு சேகரிப்புப் பணிகள் தீவிரமடைந்துள்ளது.

அதன் ஒரு பகுதியாக அச்சரப்பாக்கம் ஒன்றியம் படூர் ஊராட்சியில் 45 பூத் நிர்வாகிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை ஆற்றினார். அப்போது பேசிய அவர் 6ஆம் தேதி நடைபெற உள்ள மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வேண்டும் அதற்காக அனைத்து நிர்வாகிகளும் தீவிரமாக பணி செய்திட வேண்டும் எனவும் குறிப்பாக ஒவ்வொரு வீடுகளாகச் சென்று வாக்காளர்களை சந்தித்து கடந்த தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டங்களை எடுத்துரைத்தும் தற்போது நடைபெற்று வரும் த.வெ.க. அரசின் அவல நிலைகளை எடுத்துரைத்து வாக்கு சேகரிக்க வேண்டும் எனவும் மேலும் திண்ணைப் பிரச்சாரம் செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தினார். இளைஞரணிச் செயலாளரும் முன்னாள் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிரச்சாரம் அனைவரும் சிறப்பாக பணியாற்றிட வேண்டும். மேலும் கூட்டணி கட்சியான தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் அவர்களின் பிரச்சாரம் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்களின் பிரச்சாரம் உள்ளதால் அனைவரும் சிறப்பாக பணியாற்ற வேண்டுமென கேட்டுக் கொண்டார்.



ஆலோசனைக் கூட்டத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.எஸ்.தரணிவேந்தன், சி.என்.அண்ணாதுரை, த.உதயசூரியன், வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ., இரா.ஸ்ரீதரன், வசந்தவேல் எம்.எல்.ஏ., அருணை வெங்கட் மற்றும் கழக நிர்வாகிகள் இருந்தனர்.

மாற்றுத்திறனாளி சிறுமிக்கு எதிரான பாலியல் வன்கொடுமை:

அரசு உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்!

கழக மாற்றுத்திறனாளிகள் அணிச் செயலாளர் பேராசிரியர் தீபக் நாதன் அறிக்கை!

சென்னை, செப்.28-

தி.மு.க. மாற்றுத்திறனாளிகள் அணிச் செயலாளர் பேராசிரியர் தீபக் நாதன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மதுராந்தகத்தில் ஐந்தாம் வகுப்பு படிக்கும் மாற்றுத்திறனாளி சிறுமி, பெற்றோர் இல்லாத நேரத்தில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டதாக வெளியாகியுள்ள செய்தி மனதை உலுக்குகிறது. தன்னைத் தானே முழுமையாகப் பாதுகாத்துக் கொள்ள முடியாத ஒரு குழந்தையைப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் இந்தச் சம்பவம், ஒரு தனிப்பட்ட குற்றமாக மட்டும் பார்க்கப்படக்கூடாது. குழந்தைகளின் பாதுகாப்பையும், குறிப்பாக மாற்றுத்திறனாளிக் குழந்தைகளின் பாதுகாப்பையும் உறுதி செய்வதில் நமது சமூகமும் அரசும் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவாலை இது வெளிப்படுத்துகிறது.



10 வயது குழந்தைக்கு பதில் சொல்வாரா விஜய்!

இந்தச் சம்பவத்தை அறிந்தவுடன் மனம் பதறுகிறது. அந்தச் சிறுமி எந்த அளவுக்கு அச்சத்தையும் வேதனையையும் அனுபவித்திருப்பாள் என்பதை நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. மாற்றுத்திறனாளி என்பதற்காக ஒரு குழந்தையின் கண்ணியம், பாதுகாப்பு, உடல் சுயாட்சி ஆகியவை எந்த வகையிலும் குறைவானவை அல்ல. மாறாக, அவர்களுக்கு கூடுதல் பாதுகாப்பும் ஆதரவும் வழங்கப்பட வேண்டியது அரசின் கடமையாகும்.

பல சட்டங்கள் உள்ளன. குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டங்களும், மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டங்களும் நம்மிடம் உள்ளன. தமிழக அரசின் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையும், குழந்தைகள் பாதுகாப்பு அமைப்புகளும் செயல்பட்டு வருகின்றன.

ஆனால் சட்டங்கள் இருப்பது மட்டும் போதாது; அவை தரையில் செயல்பட வேண்டும். குறிப்பாக, மாற்றுத்திறனாளிக் குழந்தைகள் பாலியல் வன்முறையிலிருந்து பாதுகாக்கப்படுவதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், புகார் அளிக்கும் பாதுகாப்பான வழிமுறைகள், உடனடி மருத்துவ மற்றும் உளவியல் ஆதரவு, சட்ட உதவி, விசாரணையின் போது குழந்தைக்கு ஏற்ற அணுகுமுறை ஆகியவை உறுதி செய்யப்பட வேண்டும்.

ஒருபுறம், மாற்றுத்திறனாளிக் குழந்தைகளைப் பெற்றவுடன் கைவிடும் மனநிலை இன்னும் சில இடங்களில் இருப்பதை நாம் பார்க்கிறோம். மறுபுறம், மாற்றுத்திறனாளி குழந்தையை அன்போடு வளர்த்து, கல்வி கொடுத்து, சமூகத்தில் சம உரிமையுடன் வாழச் செய்யும் பெற்றோர்கள் இருக்கிறார்கள். அத்தகைய குடும்பத்தின் நம்பிக்கையை சிதைக்கும் வகையில் ஒரு குழந்தை பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்படுவது மிகுந்த வேதனையையும் கோபத்தையும் ஏற்படுத்துகிறது.

முதலமைச்சர் சி.ஜோசப் விஜய் அவர்களே, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை உங்களது நேரடி பொறுப்பில் இருக்கிறது. நியாபகம் இருக்கா?

இந்தச் சம்பவத்தில் அரசு தன்னுடைய பொறுப்பைத் தெளிவாக வெளிப்படுத்த வேண்டும். குற்றச்சாட்டு தொடர்பாக நேர்மையான, விரைவான மற்றும் பாதிக்கப்பட்ட குழந்தைக்கு உகந்த விசாரணை நடைபெற வேண்டும். குற்றம் நிரூபிக்கப்பட்டால், சட்டத்தின் கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதைவிட முக்கியமாக, பாதிக்கப்பட்ட குழந்தைக்கும் அவரது குடும்பத்திற்கும் தேவையான மருத்துவம், உளவியல் ஆலோசனை, சட்ட உதவி மற்றும் பாதுகாப்பு ஆகியவை முழுமையாக வழங்கப்பட வேண்டும்.

மாற்றுத்திறனாளிக் குழந்தைகளின் பாதுகாப்பு என்பது வெறும் நலத்திட்டப் பிரச்சினை அல்ல; அது மனித உரிமை, குழந்தை உரிமை மற்றும் சமூக நீதியின் கேள்வி.

"எங்களுக்கு பாதுகாப்பு வேண்டும்; பரிதாபம் வேண்டாம். எங்களுக்கு உரிமைகள் வேண்டும்; வெறும் அறிவிப்புகள் வேண்டாம்."

இந்தச் சம்பவம் குறித்து அரசு மௌனம் காக்காமல், உணர்வுப்பூர்வமான மற்றும் பொறுப்பான நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்பதே மாற்றுத்திறனாளிகள் சமூகத்தின் எதிர்பார்ப்பு.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.





செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வடக்கு ஒன்றியம், பிலாப்பூர் ஊராட்சியில் உள்ள பொது மக்களின் வாழ்வியலோடு இணைந்த களப்பணியாக, பசு மாடுகள் வளர்க்கப்படும் இடத்திற்குச் சென்று அங்கிருந்த கால்நடை வளர்ப்போருடன் கலந்துரையாடி, அவர்களின் அன்றாடப் பணிகளில் ஒன்றான பால் கறக்கும் பணியில் சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மேனாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஈடுபட்டு அப்பகுதி மக்களைச் சந்தித்து, கழக வேட்பாளர் இ.பரந்தாமனுக்கு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். உடன் சோழிங்கநல்லூர் மத்திய பகுதி செயலாளர்,மேனாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ். அரவிந்த்ரமேஷ், மதுராந்தகம் வடக்கு ஒன்றிய பொருளாளர் எஸ்.தேவராஜ், பிலாப்பூர் கிளை செயலாளர் ஜெ. பழனி, பிரபாகரன், பரசுராமன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் உடனிருந்தனர்.

மதுராந்தகம் இடைத்தேர்தல்: கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து

தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வாக்கு சேகரிப்பு!

மாவட்டச் செயலாளர்கள் சேலம் ஆர்.ராஜேந்திரன் - பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. அறிக்கை!

காஞ்சிபுரம், செப்.28-

காஞ்சிபுரம் மாவட்டக் கழகச் செயலாளர்கள் தா. மோ.அன்பரசன், க.சுந்தர் ஆகியோர் முன்னிலையில் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் - கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வாக்கு சேகரிக்கிறார்.

இது குறித்து மாவட்டக் கழகச் செயலாளர்கள் சேலம் ஆர் .ராஜேந்திரன், பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து, மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட நெல்வாய் பகுதியில் தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் அவர்கள், இன்று (28.09.2026 திங்கட் கிழமை) மாலை 4.00 மணியளவில், நெல்வாயல் கூட்டுரோடு சந்திப்பில் வாக்கு சேகரிக்கிறார்.

இந்த வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சியில், சேலம் மத்திய மாவட்டம் மற்றும் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நெல்வாய், மங்கலம், கள்ளபிரான்புரம், ஜானகிபுரம், வையாவூர், சூரை, அண்டவாக்கம், புதுப்பட்டு, குன்னங்குளத்தூர் ஆகிய ஊராட்சிகளுக்கு உட்பட்ட 1,2,3,4, 7, 9, 33, 34, 35, 36, 37, 38, 57, 58,68,69,71,72,73 ஆகிய பாகங்களில் பணியாற்றும் சேலம் மத்திய மாவட்டம் மற்றும் சென்னை கிழக்கு மாவட்டங்களின் பொறுப்பாளர்கள், அப்பாகங்களின் உள்ளூர் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் திரளாகப் பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு சேலம் மத்திய மாவட்ட செயலாளர் சேலம் ஆர்.ராஜேந்திரன், சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. ஆகியோர் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கனிமொழி இராஜாத்தி கருணாநிதி எம்.பி. பிரச்சாரம்!



மதுராந்தகம் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியின் கழக வேட்பாளரான இ.பரந்தாமனை ஆதரித்து கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி இராஜாத்தி கருணாநிதி, எம்.பி., அவர்களின் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்

நாள் : 30.09.2026

வ.எண்	நேரம்	இடம்
1.	மாலை 4.00 மணி	கருங்குழி – மகளிர் சந்திப்பு
2.	மாலை 5.00 மணி	மதுராந்தகம் (கடப்பேரி) வேன் பிரச்சாரம்
3.	மாலை 6.00 மணி	சரவம்பாக்கம் வேன் பிரச்சாரம்
4.	மாலை 7.00 மணி	பெரும்பேர்கண்டிகை மகளிர் கூட்டம்
5.	இரவு 8.00 மணி	கீழ்அத்திவாக்கம் கூட்டுச்சாலை (வேன் பிரச்சாரம்)

"அண்ணா அறிவாலயம்"
சென்னை18.
நாள்: 25.09.2026

தலைமைக் கழகம்,
தி.மு.க.



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட நெல்வாயல் பகுதியில் சேலம் மாவட்டச் செயலாளர் ஆர்.ராஜேந்திரன், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு.எம்.எல்.ஏ, ஆகியோர் சென்று வாக்கு சேகரித்தனர். அப்போது பேருந்து நிலையத்தில் பேருந்துக்காக காத்திருந்த பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு கேட்டார். இந்த வாக்கு சேகரிப்பில் கே எஸ் ரவிச்சந்திரன், மதுராந்தகம் வடக்கு ஒன்றிய செயலாளர் சத்யசாய்நாதன், அவைத்தலைவர் ஆறுமுகம், துணைச் செயலாளர் திருஞான செல்வம் மற்றும் லண்டன் க.முருகன் நெல்வாயல் ஊராட்சிக்குட்பட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



தாராபுரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் வழக்கறிஞர் சுகன்யாவை ஆதரித்து தெற்கு மாவட்ட செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கம்பம் ராமகிருஷ்ணன் ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் ஆகியோர் கோவிந்தபுரம் ஊராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். உடன் மாவட்ட துணைச் செயலாளர் வேப்பம்பட்டி செந்தில், ஒன்றியச் செயலாளர்கள் குமரன் தங்கப்பாண்டி, பேரூர் செயலாளர்கள் சரவணன், கனகராஜ், மேற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சிவா, கிழக்கு ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கார்த்திக், கிளைச் செயலாளர் ரவி மற்றும் மணி உடன் இருந்தனர்.